# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10722/விசாரணை/E/2019**

திரு.G.சரவணன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் அலுவலகம்,
பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை,
கடலூர் மாவட்டம்-607 001. -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு.G.சரவணன் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டபோது, அவரது கைபேசி எண். Switch Off நிலையில் இருந்தது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ராமசுப்ரமணியன், பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை துணை இயக்குநர் அலுவலகம், கடலூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 13.06.2019 தேதியிட்டு கடலூர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை துணை இயக்குநர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், 01.01.1983 முதல் 31.12.1993 வரையிலான காலங்களில், கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளசேதங்களினால் கடலூர் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சேதமடைந்த கோப்புகள் மற்றும் ஆவணங்கள் குறித்த பட்டியல் மற்றும் மீட்கப்பட்ட கோப்புகள் மற்றும் ஆவணங்களின் பட்டியல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், 01.01.1994 முதல் 31.12.2004 வரையிலான காலங்களில், கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளசேதங்களினால் கடலூர் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் சேதமடைந்த கோப்புகள் மற்றும் ஆவணங்கள் குறித்த பட்டியல் மற்றும் மீட்கப்பட்ட கோப்புகள் மற்றும் ஆவணங்களின் பட்டியல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், 1991-ம் ஆண்டில் கடலூர் வட்டார பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை உதவி இயக்குநர் அலுவலகம் கலைக்கப்பட்டபோது இந்த அலுவலகத்திலிருந்து கடலூர் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள், துணை இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட கோப்புகள் மற்றும் பதிவேடுகள் குறித்த முழுமையான பட்டியல் நகல் மற்றும் இவைகள் பெற்றுக் கொண்டது தொடர்பாக வழங்கப்பட்ட ஒப்புதல் சீட்டு, இதற்கான உத்திரவு, 1983 முதல் 2003-ம் ஆண்டு வரை எந்தெந்த ஆண்டுகள் தொடர்புடைய ஆவண அழிப்பு பதிவேடுகள் தற்போது பராமரிப்பில் உள்ளன என்ற விபரம், இதற்கான உத்தரவின் நகல்,

01.01.1982 முதல் 31.12.1982 வரையிலான காலங்கள் தொடர்புடைய (நி.மு.) கோப்புகள், எந்தெந்த தேதிகளில் அழிக்கப்பட்டுள்ளன எனபது குறித்த விபரங்கள், உத்தரவின் நகல்கள் ஆகியவற்றை 5 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 13.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கும் மற்றும் 19.10.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் அவர்களை தொலைபேசியில் வாயிலாக தொடர்பு கொண்டபோது, அவரது கைபேசி எண் Switch Off நிலையில் இருந்தது. இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

4. இது குறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்களை வழங்கிட காலஅவகாசம் அளிக்கக் கோரினார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை இவ்வாணையம் பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும், விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது:-

> *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 13.06.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள 5 இனங்கள் தொடர்பாக தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10722/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் அலுவலகம்,
பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை,
கடலூர் மாவட்டம்-607 001.

திரு.G.சரவணன்,
2-248/2, கோவிந்தராஜா கோவில் தெரு,
பசுபதிகோவில் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்-614 206.

Copy to: File

RJ/PS 12.11.2020